# சுபீட்சம்

சுபீட்சம் SUPEEDSAM EVERYTHING FOR PEOPLE — அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள www.supeedsam.com

புதன்கிழமை 23.10.2024 | supeedsam.com | supeedsam@gmail.com


# வட,கிழக்கு அபிவிருத்தி நிதியத்தை உருவாக்குவது குறித்து பிரதமருடன் பேச்சு

'வடக்கு – கிழக்கு அபிவிருத்தி நிதியத்தை உருவாக்குவது தொடர்பில் பிரதமர் ஹரிணி அமரசூரியவிடம் கடந்த வாரம் கலந்துரையாடியிருக்கின்றோம். நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பின்னர் இது சம்பந்தமாக முன்னெடுப்புகளை மேற்கொள்வது தொடர்பாக சில இணக்கப்பாடுகளும் எட்டுப்பட்டுள்ளன.'

– இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பேச்சாளரும் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்ட வேட்பாளருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

யாழ். வடமராட்சியில் நடைபெற்ற இளைஞர்களுடனான கேள்வி – பதில் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

02 ஆம் பக்கத்தில்...



## இளைஞர்களின் எதிர்பார்ப்புகள் நிறைவேற்றப்பட வேண்டும்!



வடக்கு கிழக்கில் உள்ள இளைஞர்,யுவதிகள் மத்தியில் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பாக ஆர்வம் காணப்படுகிறதோடு, இனப்பிரச்சினையும் தீர்ப்பதற்கான வழி வகைகளையும் கையாள வேண்டும் என்கிற விடையத்தையும் அவர்கள் எதிர்பார்த்துள்ளதாக வன்னி மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

மன்னாரில் உள்ள அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி வடக்கு

02 ஆம் பக்கத்தில்...

## எந்த நீதிமன்றத்திலும் ஆஜராக தயார்



லலித்குகன் காணாமலாக்கப்பட்டமை தொடர்பில் யாழ்ப்பாணம் நீதிமன்றம் தவிர வேறு எந்த நீதிமன்றத்திலும் ஆஜராக தயார் என முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

02 ஆம் பக்கத்தில்...






## தமிழ் மக்களின் உரிமையை வென்றெடுக்க முடியும்!

ஜனநாய தமிழ்த்தேசியக் கூட்டணி தேர்தலில் பலமானதொரு கட்சியாக மக்கள் ஆணை கிடைத்தால் தமிழ் மக்களின் அடிப்படை உரிமையை வென்றெடுக்க முடியும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் த. சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி, பரந்தன் பகுதியில் ஜனநாய தமிழ்த் தேசியக் கூட்டணி சார்பாக போட்டியிடும் வேட்பாளர்களான தர்மலிங்கம் சித்தார்த்தன் மற்றும் பா. கஜதீபன் ஆகியோர் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டனர். இதன் பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

02 ஆம் பக்கத்தில்...



# ஸ்ரீரங்காவை கைது செய்ய விசாரணைகள் ஆரம்பம்






முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜே.ஸ்ரீரங்காவை கைது செய்வதற்கான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினரால் கொழும்பு பிரதான நீதவான் திலின கமகேவுக்கு அறிவிக்கப்பட்டது.

இதன்படி, விசாரணை அதிகாரிகள் நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்ததுடன், முக்கிய சந்தேக நபர் தற்போது வீட்டில்

02 ஆம் பக்கத்தில்...



## பெண் வேட்பாளர்கள்: வாய்ப்பளிக்காத பிரதான கட்சிகள்

பொதுத் தேர்தலில் நான்கு பிரதான கட்சிகளிலும் பெண் வேட்பாளர்களுக்கு மிகவும் குறைவாகவே வாய்ப்புகள் வழங்கப்படடுள்ளமை வேட்பாளர் பட்டியல்களை ஆய்வுக்கு உட்படுத்தியதில் தெரியவந்துள்ளது.

பொதுத் தேர்தல் எதிர்வரும் நவம்பர் 14ஆம் திகதி நடைபெற உள்ள நிலையில், பிரதானக் கட்சிகளான தேசிய மக்கள் சக்தி, ஐக்கிய மக்கள் சக்தி, புதிய ஜனநாயக முன்னணி மற்றும் ஸ்ரீலங்கா

02 ஆம் பக்கத்தில்...




# பாராளுமன்ற தேர்தலுக்கான தபால்மூல வாக்களிப்பு அத்தாட்சிபடுத்தும் அலுவலர்களுக்கான கலந்துரையாடல்!!

(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

எதிர்வரும் பாராளுமன்று தேர்தல் நவம்பர் மாதம் 14 திகதி இடம் பெறவுள்ள நிலையில், இதனை முன்னிட்டு 2024 பாராளுமன்ற தேர்தலிற்கான தபால் மூல வாக்களிப்பு ஒக்டோபர் மாதம் 30ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளதனால் தேர்தலுக்கான தபால்மூல வாக்களிப்பு அத்தாட்சிபடுத்தும் அலுவலர்களுக்கு தெளிவூட்டும் கலந்துரையாடல் மாவட்ட அரசாங்க அதிபரும் தெரிவத்தாட்சி அலுவலருமான திருமதி ஜஸ்டினா முரளிதரன் தலைமையில் பழைய மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.





தேர்தல் கடமையில் ஈடுபடும் அரச உத்தியோகத்தர்கள் தபால்மூல வாக்களிப்பு அத்தாட்சிபடுத்தும் அலுவலர்கள் மேற்கொள்ள வேண்டிய முன்னாயத்த விடயங்கள் தொடர்பாக இதன் போது விரிவாக தெளிவூட்டப்பட்டது.

மேலும் வாக்குகளை அத்தாட்சிப்படுத்தும் படிமுறைகள் தொடர்பான விளக்கங்களும் இதன் போது வழங்கப்பட்டது.

இந் நிகழ்வில் உதவித் தேர்தல்கள் ஆணையளர் எம்.பி.எம் சுபியான், திணைக்கள தலைவர்கள், அரச உயர் அதிகாரிகள் என பலர் கலந்து கொண்டனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 392 வேட்பாளர்கள் இம்முறை பாராளுமன்ற தேர்தலில் போட்டியிடவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

# மன்னார் நுழைவாயிலில் அமைக்கப்படும் நகர கடற்கரை பூங்கா உல்லாசப் பயணிகளை கவரும்

## மன்னார் அரச அதிபர் கனகேஸ்வரன்

( வாஸ் கூஞ்ஞ )

மன்னார் நுழைவாயிலில் அமையப் பெறும் இயற்கை பூங்கா மன்னார் மாவட்டம் வரும் உல்லாசப் பயணிகளை கவரும் ஒரு இடமாக அமையும் என மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் இவ்வாறு தெரிவித்தார்.

-மன்னார் நுழைவாயிலில் அமைக்கப்படும் நகர கடற்கரை பூங்கா அங்குரார்ப்பண நிகழ்வு திங்கள் கிழமை (21) நிகழ்வு பெற்றபொழுது மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் தெரிவிக்கையில்

நீண்டகாலமாக மன்னார் மாவட்டத்தின் மக்களின் ஒரு முக்கிய தேவைப்பாடாக இருந்த இயற்கை பூங்கா (22) மன்னார் நகர சபையிடம் கையளிக்கப்பட்டுள்ளது.



இந்த இடத்தை மன்னார் நகர சபையிடம் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டதைத் தொடர்ந்து இன்றையத் தினமே (21) இயற்கை பூங்கா அமைப்பதற்கான செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயத்தில் மன்னார் மாவட்ட மக்களின் நீண்டநாள் கனவு இன்று நனவாகியதை நான் பார்க்கின்றேன். மன்னார் மாவட்டத்தை உல்லாசப் பயணிகளின் ஒரு கேந்திர இடமாக மாற்றுவதற்கு இந்த பூங்கா ஒரு முக்கிய இடத்தை வகிக்கும்.

இங்கு அமைக்கப்பட இருக்கும் பூங்கா மன்னார் நகரசபை மற்றும் உல்லாசபயணத்துறை திணைக்களம் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் அமையப்பெற இருக்கின்றது.

மன்னார் மாவட்டத்தில் பலவிதமான உல்லாசப் பயணிகளை கவரக்கூடிய ஒரு தகவல் மையம். மக்கள் காலை மாலை நேரங்களில் தங்கள் உடற்பயிற்சி செய்யக்கூடியதாகவும் , பொழுது போக்காக வந்து இங்கு அமரக்கூடியதாகவும் , விளையாட்டு உபகரணங்கள் கொண்ட வசதிகள் மற்றும் அருகில் படகில் பயணிக்கக்கூடிய வசதிகள் இவ்வாறு பலதரப்பட்ட வசதிகள் கொண்ட ஒரு இடமாக இது அமையப்பெற இருக்கின்றது.

இந்த இயற்கை பூங்காவுக்கான கட்டமைப்புக்களை நகர அபிவிருத்தி சபையினர் முன்னெடுக்க உள்ளனர். இந்த வேலைத் திட்டங்கள் யாவும் நகர அபிவிருத்தி சபையின் திட்டமிடலிலேயே இது நடைபெற இருக்கின்றது.

ஆகவே மன்னார் மாவட்ட மக்களின் நீண்டநாள் கனவை நனவாக்க ஒத்துழைத்த யாவருக்கும் நான் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் என்ற ரீதியில் இந்த நேரத்தில் நன்றி தெரிவித்து நிற்கின்றேன் என இவ்வாறு தெரிவித்தார்.

## எந்த நீதிமன்றத்திலும் ஆஜராக தயார்

முன்னாள் ஜனாதிபதி தனது சட்டத்தரணி ரொமேஸ் சில்வா ஊடாக இன்று உயர்நீதிமன்றத்திற்கு இதனை தெரிவித்துள்ளார். மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் முன்னைய தீர்ப்பினை சவாலுக்கு உட்படுத்தும் விதத்தில் காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தாக்கல் செய்த மனு இன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட வேளையே கோட்டாபயவின் சட்டத்தரணி தனது கட்சிக்காரரின் பாதுகாப்பு கரிசனை குறித்து தெரிவித்துள்ளார்.

# பெண்களுக்கான கரைபடியாத அரசியலை முன்னெடுக்கவுள்ளேன்




நாட்டில் காணப்படும் பெரும் பிரதான கட்சிகளில் இம் முறை பாராளுமன்ற தேர்தலில் போட்டியிடுவோரில் பெண் வேட்பாளர்கள் குறைவாகவே காணப்படுகிறது ஆனால் எமது சர்வஜன அதிகார கட்சி ஊடாக பெண் வேட்பாளர்கள் களமிறக்கப்பட்டுள்ளமை வரவேற்கத்தக்கது என திருகோணமலை மாவட்ட வேட்பாளர் ரோஹினா மஹ்ரூப் தெரிவித்தார்.

கிண்ணியா பூவரசந்தீவு பகுதியில் (22) நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தலின் தேர்தல் பரப்புரை கூட்டத்தின் பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார் தொடர்ந்தும் தெரிவிக்கையில் பல கட்சிகள் சிதறி காணப்படுவதுடன் பெண்களுக்கான வாய்ப்பு குறைவாக உள்ளது இதனை சரிசெய்ய திருமலை மக்கள் என்னை எதிர்பார்க்கிறார்கள் ஆணாதிக்கத்தை தூரமாக்கி புதிய கட்சிதில் களமிறக்கி பூர்த்தி செய்யவுள்ளேன் பெண்களுக்காக பல திட்டங்களை செய்ய முன்வைக்க உள்ளோம் .

தீராத பெண் விதவைகள் தொடர்பிலும் கட்சியின் தலைவர் திலித் ஜயவீரவின் துணிச்சலான எதிர்க் கட்சி என்ற தொனிப் பொருளில் தேர்தலை எதிர் நோக்கவுள்ளோம். பெண் பிரதிநிதித்துவம் காணப்பட வேண்டும் பெண் பலத்தால் பாராளுமன்றம் அனுப்புவார்கள் எனவும் நம்புகிறேன் .சுமார் 30 க்கும் மேற்பட்டவர்கள் தேர்தலில் இருந்து மக்கள் ஒதுக்க முதல் அவர்களாகவே ஒதுங்கி விட்டார்கள் ஊழலற்ற வராக எனது தந்தை அரசியலில் இருந்தார். இதற்காக கரை படியாத எனது தந்தை எம்.ஈ.எச் மஹ்ரூப் அவர்களின் பாசறையில் வளர்ந்த என்னை மக்கள் நன்கு அறிவார்கள்.

மக்கள் பிரச்சினைகளை தீர்த்து வைத்து எனது அரசிதலை முன்னெடுக்கவுள்ளேன் கமிசன் ,ஊழல் வாதிகள் தாங்களாகவே விலகியுள்ளார்கள் . அரசியலில் எனக்கு என்று ஒரு அங்கீகாரத்தை தந்தால் அது நிச்சயமாக ஏழை எளியவர்களுக்காகவே இருக்கும் எனது பணிகளை அவர்களுக்காகவே முன்னெடுப்பேன் என்றார்

## பெண் வேட்பாளர்கள்: வாய்ப்பளிக்காத பிரதான கட்சிகள்

பொதுஜன பெரமுன ஆகியன தமது தீவிர பிரச்சாரத்தை ஆரம்பித்துள்ளன.

இந்த நிலையில், நாட்டில் கடந்த 2022ஆம் ஆண்டு ஏற்பட்ட பாரிய அரசியல் புரட்சிகள் நாட்டு மக்கள் மத்தியில் கடுமையான விழிப்புணர்வுகளை ஏற்படுத்தியதன் விளைவாகதான் தேசிய மக்கள் சக்தி அதிகாரத்தை கைப்பற்றியதாக அரசியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

ஆனால், அந்த அரசியல் புரட்சிக்கு ஏற்ப தேசிய மக்கள் சக்தி மாத்திரமல்ல எந்தவொரு பிரதான அரசியல் கட்சியிலும் பெண் வேட்பாளர்களுக்கான வாய்ப்புகள் வழங்கப்படவில்லை. இந்த நான்கு கட்சிகளிலும் 1019 பேர் தேர்தலில் வேட்பாளராக போட்டியிடுகின்றனர். தேசிய பட்டியல் ஊடாக 29 பேர் தெரிவுசெய்யப்பட உள்ளனர்.

வேட்பாளர் பட்டியலில் 85 பேர் மாத்திரமே பெண் வேட்பாளர்களாக உள்ளனர். இது 8 வீதமான ஒதுக்கீடாகும். அனைத்து மாவட்டங்களிலும் குறைந்தப்பட்சமாக ஒரு பெண் வேட்பாளரையாவது நிறுத்தியுள்ள கட்சியாக தேசிய மக்கள் சக்தி உள்ளது. ஐக்கிய மக்கள் சக்தி 13 மாவட்டங்களில் ஒரு பெண் வேட்பாளரை குறைந்தப்பட்சமாக நிறுத்தியுள்ளது.

புதிய ஜனநாயக முன்னணி 11 மாட்டங்களிலும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன 5 மாவட்டங்களிலும் குறைந்தபட்சம் ஒரு பெண் வேட்பாளரை நிறுத்தியுள்ளது. இவற்றில் நான்கு மாவட்டங்களில் பெண் தலைமைகளும் உள்ளன. கொழும்பில் பிரதமர் ஹரிணி அமரசூரிய தலைமையில் தேசிய மக்கள் சக்தி போட்டியிடுகிறது.

இரத்தனபுரி மாவட்டத்தில் பவித்ரா வன்னியாராச்சி தலைமையில் புதிய ஜனநாயக முன்னணி போட்டியிடுவதுடன், புத்தளத்தில் சட்டத்தரணி சமரி பிரியங்கா மற்றும் வன்னியில் அமரசேகர லியனாராச்சிகே துஷாரி தலைமையில் பொதுஜன பெரமுன போட்டியிடுகிறது.

அதிகபட்சமாக 32 பெண் வேட்பாளர்களுக்கு தேசிய மக்கள் சக்தியும் ஐக்கிய மக்கள் சக்தி 14 பேருக்கும் வாய்ப்புகளை வழங்கியுள்ளன. கடந்த உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் 25 வீதமான பெண் வேட்பாளர்களுக்கு வாய்ப்பு வழங்கப்பட்ட போதிலும், அந்த நடைமுறையை நாடாளுமன்றத் தேர்தலில் எந்தவொரு கட்சியும் பின்பற்றவில்லை.

உள்ளூராட்சிமன்ற தேர்தல் சட்டத்தை போன்று பெண் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்த நாடாளுமன்ற மற்றும் மாகாண சபைத் தேர்தல்கள் சட்டங்களும் மாற்றியமைக்கப்பட வேண்டுமென சிவில் அமைப்புகளும், மக்களும் தொடர்ச்சியாக கோரிக்கைகளை விடுத்து வருகின்றமையும் சுட்டிக்காட்டத்தக்கது.

## ஸ்ரீரங்காவை கைது செய்ய விசாரணைகள் ஆரம்பம்

இல்லை என்று தெரிவித்தனர்.

இந்நிலையில், அவரைக் கண்டுபிடிப்பதற்காக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் விசாரணை அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சந்தேகநபர்கள் சார்பில் மன்றில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி மைத்திரி குணரத்ன, இந்த சம்பவத்தின் சாட்சிகளாக தமது கட்சிக்காரர்கள் இருப்பதாக நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

மேலும், சாட்சிகளை விளக்கமறியலில் வைத்தால், வழக்கின் உண்மைகளை பொலிஸாரினால் சரிபார்க்க இயலாது என்றும் சட்டத்தரணி சுட்டிக்காட்டியிருந்தார்.

இதனையடுத்து முன்வைக்கப்பட்ட உண்மைகளை கருத்திற்கொண்ட நீதவான், சம்பவம் தொடர்பில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த எட்டு சந்தேக நபர்களில் நால்வரை மாத்திரம் விடுதலை செய்யுமாறு உத்தரவிட்டுள்ளார். ஏனைய நான்கு சந்தேக நபர்களையும் எதிர்வரும் நவம்பர் மாதம் நான்காம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

## தமிழ் மக்களின் உரிமையை வென்றெடுக்க முடியும்!

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் தேசிய பரப்பில் பலமான கட்சியாக மக்கள் எமக்கு ஆதரவு தருகின்ற வேளை முன்புபோல் இல்லாது தமிழ் மக்களின் ஒற்றுமையாக செயற்பட்டு தமிழ் மக்களின் பிரச்சனையை தீர்ப்போம். தற்போதைய அரசாங்கம் தமிழ்த் தேசிய இனப்பிரச்சனைக்கு எவ்வாறு செயற்படும் என்பது தெரியாது.

ஜனாதிபதியுடன் பேசி நியாயமான தீர்வைப் பெறுவதற்கான முயற்சிகளை முன்னெடுப்போம் என தெரிவித்தார்.

## இளைஞர்களின் எதிர்பார்ப்புகள் ....

கிழக்கில் தேர்தல் பிரச்சாரங்களை முன்னெடுத்து வருகின்றது.இதனுடாக மக்களின் நிலைப்பாட்டையும் தெரிந்து கொண்டுள்ளோம்.

இளைஞர் மத்தியில் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பாக ஆர்வம் காணப்படுகிறது.மேலும் இனப்பிரச்சினையும் தீர்ப்பதற்கான வழி வகைகளையும் நாங்கள் கையாள வேண்டும் என்கிற விடையத்தையும் எதிர்பார்க்கின்றனர்.

குறித்த இரு விடயங்களையும் ஒரே திசையில் கொண்டு செல்ல வேண்டும் என்கிற சூழ்நிலை எமக்கு ஏற்பட்டுள்ளது.

திறமையுள்ளவர்கள் தெரிவு செய்யப்படாமல்,அரசியல் ரீதியான செயல் பாடுகளில் தங்களுடன் நிற் கின்றவர்களுக்கு சில அமைச்சர்களைக் கொண்ட கட்சிகள் வேலைவாய்ப்புகளை பெற்றுக் கொடுத்துள்ளனர்.

குறித்த விடையத்தில் இளைஞர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். தற்போது ஊழல் அற்ற அரசாங்கம் எனகூறப் படுகின்ற தற்போதைய ஜனாதிபதியின் கூற்று எல்லாம் அனைத்து அபிவிருத்தி ரீதியான செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும் என இளைஞர்கள் கூறுகிறார்கள்.

ஆகவே ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்பு குறித்த இரு விடயங்களையும ஒரே திசையில் கொண்டு செல்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கும்.

எங்களுடைய தேர்தல் விஞ்ஞாபனத்திலும் நாங்கள் அபிவிருத்தியோடும்,இனப்பிரச்சினைக்கான தீர்வுக்கான வழி வகைகள் குறித்தும் நாங்கள் சொல்லியாக வேண்டும் என்கின்ற நிலை இருக்கின்றது.

இளைஞர்களின் கோரிக்கைகளை நான் ஏற்றுக் கொள்கிறேன். யாழ்ப்பாணத்தில் ஒரு ஆசனம் குறைக்கப்பட்டுள்ளது.

வெளிநாடுகளுக்கு வேலைவாய்ப்புகளை தேடிச் சென்றவர்களின் தொகை அதிகரித்துள்ளதான் காரணமாகவே குறித்த ஆசனம் குறைக்கப்பட்டுள்ளது.

பொதுவாக பார்க்கின்ற போது இளைஞர்களின் ஆர்வம் உள்நாட்டிலே வேலை வாய்ப்புக்கள்,தொழிற்சாலைகள் அமைத்தல் உள்ளிட்ட பொருளாதார ரீதியாக அவர்களின் சிந்தனைகள் செயல்பட ஆரம்பித்துள்ளது. எனவே இளைஞர்,யுவதிகளின் உடைய சிந்தனைகளை ஒரு பெறுமதியாக ஏற்று நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்றார்.

## வட,கிழக்கு அபிவிருத்தி நிதியத்தை

அவர் மேலும் தெரிவிக்கையில்,

‘‘இளைஞர்கள் தற்காலத்தில் வேலை வாய்ப்பு தொடர்பான பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்கின்றார்கள். கடந்த தேர்தல் காலங்களில் தற்சார்பு பொருளாதார கட்டமைப்பை உருவாக்குவோம் என்ற வாக்குறுதிகளை வழங்கியிருந்தோம். அதற்கான சில முன்னெடுப்புகளை நாங்கள் ஏற்கனவே கடந்த நாடாளுமன்ற காலத்திலும் செய்திருந்தோம்.

கொரோனா பெருந்தொற்றுக்கு மத்தியிலே கடந்த நாடாளுமன்றத் தேர்தல் இடம்பெற்றது. அதன்பின்னர் நாட்டின் பொருளாதார நிலைமை மிகவும் மோசமாகப் பாதிப்படைந்திருந்தது.

அப்போது ஜனாதிபதியாக இருந்த கோட்டபாயவோடு நாங்கள் வடக்கு - கிழக்கில் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கான திட்டம் ஒன்றைக் கையளித்திருந்தோம்.

நாட்டினுடைய ஒரு பகுதி பொருளாதாரத்தில் வளர்ச்சியடைகின்றபோது அதன் பலன் முழுநாட்டையும் சென்றடையும் என்ற விடயத்தையும் தெளிவுபடுத்தியிருந்தோம்.

அதன்போது வடக்கு - கிழக்குக்கான அபிவிருத்தி நிதியம் ஒன்றை உருவாக்குவதற்கான ஒரு முன்னெடுப்பு செய்யப்பட்டது. அதனை நடைமுறைப்படுத்துவதற்குப் பல முயற்சிகள் எடுக்கப்பட்டன.

இடையிலே நாட்டிலே ஏற்பட்ட பாரிய பொருளாதார வீழ்ச்சியால் வடக்கு - கிழக்குக்கான அபிவிருத்தி நிதியக் கட்டமைப்பிலும் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டிய கட்டாயம் இருந்தது. நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அனைத்து கட்சித் தலைவர்களையும் இணைத்து பொருளாதார மேம்பாடு தொடர்பான கூட்டங்களை நடத்தினோம். சர்வதேச நாணய நிதியத்திடம் உதவி கேட்க வேண்டும் என்று அப்போதைய அரசை வலியுறுத்தி 12 கட்சித் தலைவர்களுடைய கையொப்பத்தோடு ஒரு ஆவணம் ஒன்றையும் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து இருந்தோம்.

வடக்கு - கிழக்கு அபிவிருத்தி நிதியம் ஆரம்பிப்பது தொடர்பில் இந்தியா, ஐரோப்பிய நாடுகள் உட்பட பல சர்வதேச நாடுகளுடனும் பேசியிருக்கின்றோம்.

அபிவிருத்தி நிதியத்தை உருவாக்குவதற்கு நீண்ட காலம் செல்வதற்குப் பல காரணங்கள் உள்ளன. அதில் விசேட காரணமாக நாடு பாரிய பொருளாதாரம் வீழ்ச்சிக்கு உள்ளானமையும் அதன் பின்னர் ஜனாதிபதிகள் மாற்றமடைந்ததையும் கூறலாம்.

கோட்டபாய அரசோடு பேச்சுவார்த்தையில் ஈடுபட்டதைப் போல் பின்னர் ஜனாதிபதியாக வந்த ரணில் விக்கிரமசிங்கவிடமும் வடக்கு - கிழக்கு அபிவிருத்தி நிதியம் தொடர்பான அறிக்கைகளையும் சமர்ப்பித்திருந்தோம்.

தற்போது நாட்டில் மீண்டும் ஆட்சி மாற்றம் இடம்பெற்றிருக்கின்றது. தற்போது பிரதமராகப் பதவியேற்றுள்ள ஹரிணி அமரசூரியவிடமும் வடக்கு - கிழக்கு அபிவிருத்தி நிதியம் பற்றிய விடயங்களைச் சென்ற வாரமும் கலந்துரையாடியுள்ளோம். அது நாட்டினுடைய வளர்ச்சிக்குப் பங்காற்றும் என்ற விடயங்களையும் தெளிவுபடுத்தியிருந்தோம்.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலுக்கு பின்னர் இது சம்பந்தமாக முன்னெடுப்புகளை மேற்கொள்வது தொடர்பாக சில இணக்கப்பாடுகளும் எட்டுப்பட்டுள்ளன. அதனைத் தொடர்ந்து வெற்றிகரமாக முன்னெடுப்போம்.’ - என்றார்.

# தமிழரசுக் கட்சி வேட்பாளர் அ.நிதான்சனின்

# கல்முனை காரியாலயம் திறப்பு

**பாறுக் ஷிஹான்**

எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலை முன்னிட்டு அம்பாறை மாவட்டம் திகாமடுல்ல தேர்தலில் தொகுதியில் தமிழரசுக் கட்சி சார்பாக போட்டியிடும் வேட்பாளர் அருள்ஞானமூர்த்தி நிதான்சனின் உத்தியோகபூர்வ கட்சிக் காரியாலம் திங்கட்கிழமை(இரவு) திறந்து வைக்கப்பட்டது.

நிதான்சன் ஆதரவணி குறித்த கட்சி அலுவலகத்தை கல்முனை உடையார் வீதியில் திறப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டதுடன் பிரதம விருந்தினராக இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வாலிபர் முன்னணி துணைச் செயலாளரும் வீட்டுச் சின்னம் இலக்கம் 1 இல் போட்டியிடும் வேட்பாளருமான அருள்ஞானமூர்த்தி நிதான்சன் மற்றும் சக வேட்பாளரான பாக்கியம் மஞ்சுளா ஆகியோர் இணைந்து திறந்து வைத்தனர்.

இதன் போது தற்போதைய பாராளுமன்ற தேர்தலின் முக்கியத்துவம் வாக்களிப்பதன் ஊடாக தமிழ் பிரதிநிதித்துவத்தை எவ்வாறு பெற்றுக்கொள்வது கடந்த கால தேர்தல் தவறுகள் பருவ கால தேர்தல் வியாபாரிகளின் செயற்பாடுகள் எதிர்வரும் காலங்களில் நடைபெறவுள்ள தேர்தல்கள் உட்பட அரசியல் நிலவரங்கள் தொடர்பில் பல்வேறு விடயங்கள் அங்கு பேசப்பட்டமை குறிப்பிடத்தக்கது.





## மக்களின் அடிமட்ட பிரச்சனை தெரிந்தவர்களை பாராளுமன்றத்திற்கு அனுப்புங்கள்

### பாராளுமன்றத் தேர்தல் வேட்பாளர் தி.தங்கவேலு

**த.சுபேசன்**

மக்களுடைய அடிமட்ட பிரச்சனைகளை நன்றாக அறிந்தவர்களை பாராளுமன்றத்திற்கு அனுப்ப மக்கள் ஒத்துழைக்க வேண்டும் என ஜனநாயக தேசியக் கூட்டணியின் யாழ்ப்பாண தேர்தல் மாவட்ட வேட்பாளர் தி.தங்கவேலு தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை சாவகச்சேரிப் பகுதியில் இடம்பெற்றிருந்த ஜனநாயக தேசியக் கூட்டணியின் பிரசார கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்படி தெரிவித்திருந்தார்.இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்

பாராளுமன்ற உறுப்பினர்களாக உங்களின் பிரச்சனைகளை நன்கு அறிந்தவர்களை உங்கள் கிராமத்தில் அல்லது பிரதேசத்தில் இருக்கும் ஒருவரை அனுப்புங்கள்.

கடந்த வடக்கு மாகாணசபைத் தேர்தலில் ஒரு தரப்பினர் நீதிமன்றில் இருந்த நீதியரசரை வடக்கு மாகாணசபையின் முதலமைச்சர் வேட்பாளராக நியமித்தனர்.அவர்கள் தம் மீது நம்பிக்கை இல்லாததால் தான் அப்படிப்பட்ட ஒரு முடிவை எடுத்தனர்.



ஆனால் முதலமைச்தராக வந்தவருக்கு மக்களின் அடிமட்ட பிரச்சனை தெரியாது.கொழும்பில் நீதிபதியாக இருந்தவருக்கு வடக்கு மக்களின் பிரச்சனை தெரிந்திருக்க வாய்ப்பில்லை.

மக்கள் இனிமேலும் அவ்வாறான தவறுகளை விடக்கூடாது.கிராம மட்டத்தில் இருந்து மக்களின் பிரச்சனைகளை நன்கு அறிந்த ஒருவருக்கு வாக்களித்து அவரை பாராளுமன்றம் அனுப்பி உங்களுடைய தேவைப்பாடுகளை பூர்த்தி செய்ய முயற்சிக்க வேண்டும்.

இன்று பலரும் தம் மீது நம்பிக்கை இன்றி வேறு பொதுக் கட்டமைப்புக்களுடைய சின்னங்களை வலிந்து எடுத்து தேர்தலில் போட்டியிடுகின்றனர்.

ஆனால் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் தலைமையிலான எமது ஜனநாயக தேசிய கூட்டணி இம்முறை முதன்முறையாக தபால்பெட்டி சின்னத்தில் யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடுகிறது.

நாம் கடந்த காலத்தில் மேற்கொண்ட அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் எம்மை வெற்றி பெற வைக்கும் என மேலும் அவர் சுட்டிக்காட்டியிருந்தார்.

## சுயேட்சை வேட்பாளர் லவகுமாருக்காக கல்குடாவில் அணிதிரண்ட இளைஞர்கள்!!



பாராளுமன்ற தேர்தல் நெருங்கி வரும் நிலையில் இம்முறை சுயேட்சை குழு – 2 முந்திரியம் பழம் சின்னத்தில் 6 இலக்கத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் களமிறங்கியுள்ள சமூக செயற்பாட்டாளர் வி.லவகுமாரிற்கு இளைஞர்கள் மத்தியில் ஆதரவு பெருகிவருவதாக வே ட்பாளர் வி.லவகுமார் தெரிவித்தார்.

கடந்த காலங்களில் தான் பல்வேறு பட்ட உரிமை சார்ந்த அறவழிப் போராட்டங்களில் தமிழ் மக்களுக்காக குரல் கொடுத்திருந்த நிலையில், தன்னை மக்கள் அதிகதிகமாக வாக்களித்து பாராளுமன்றத்திற்கு அனுப்பி வைத்தால் வடகிழக்கு உள்ளிட்ட அனைத்து தமிழ் மக்களிற்காகவும் தான் பாராளுமன்றத்தில் குரல் எழுப்பி தமிழர்களின் பிரச்சனைகளுக்கு தீர்வை பெற்றுத் தருவதாக கூறியுள்ளார்.

அத்தோடு எமது சமூகத்திற்கு அதிகமாக சுகாதார பிரச்சனைகள் காணப்படுவதனால் முதல் கட்டமாக தன்னால் மலசல கூடங்களை கட்டித் தர முடியுமெனவும், கல்வி கற்பதற்கும் பல்கலைக்கழகம் செல்வதற்கும் வசதியற்ற மாணவர்களுக்கு தம்மால் புலம்பெயர் உறவுகளின் உதவிகளுடன் உதவி முடியும் எனவும் தெரிவித்த வீ.லவகுமார் இவ்வாறான உதவிகளை தான் செய்வதற்கு தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார்.

கல்குடா தொகுதி இளைஞர்கள் தனது இல்லம் தேடி வந்து தமக்கு ஆதரவு தெரிவித்ததை தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

## நான் ஓடவும் இல்லை. ஒழியவுமில்லை – நான் புலி பதுங்கியிருந்தேன் பாய்வதற்கு

### அனுஷா சந்திரசேகரன் தெரிவிப்பு

**(க.கிஷாந்தன்)**



ஒரு பெண்ணாக நான் மலையகத்தை கையில் எடுக்கிறேன். மலையகத்தை சரியான முறையில் கொண்டு நடத்த வேண்டும் என்ற பொறுப்பு எங்களுக்கு இருக்கிறது. ஆகவே தான் இம்முறை நான் மைக் சின்னத்தில் களமிறங்கி இருக்கிறேன் என ஜனநாயகக் குரல் கட்சியின் நுவரெலியா மாவட்ட வேட்பாளர் அனுஷா சந்திரசேகரன் தெரிவித்தார்.

டயகம பகுதியில் இடம்பெற்ற பொதுக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கையில்.

இம்முறை ஐக்கிய ஜனநாயக குரல் எனும் கட்சியினூடாக மைக் சின்னத்தில் களமிறங்கி இருக்கிறேன். பல எதிர் தரப்பினர் நான் கடந்த முறை தேர்தல் கேட்டுவிட்டு ஓடி ஒழிந்துவிட்டேன் எனக் கூறுகின்றனர். ஆனால், அப்படியல்ல. நான் ஓடவும் இல்லை. ஒழியவுமில்லை. இதே மலையகத்தில் தலைவாக்கலையில் தான் இருக்கிறேன்.

என்னுடைய தந்தை 1989 ஆம் ஆண்டு தேர்தல் கேட்டபோது தோல்வி அடைந்தார். முதலில் அவருக்கு தோல்வி தான் கிடைத்தது. ஆரம்பகால உறுப்பினர்களுக்கு அது தெரியும். 1994 ஆம் ஆண்டு வரை அவர் சிறையில் வைக்கப்பட்டிருந்தார் அதற்கு காரணம் அரசியல் பழிவாங்கல்.

ஒருவர் மலையகத்தில் புதிதாக உருவாக நினைத்தால் அவரை அரசியல் பழிவாங்கல்களுக்கு உட்படுத்துவார்கள். நான் கடந்த முறை தேர்தல் கேட்ட பிறகு எனக்கும் நிறைய அரசியல் பலி வாங்கல்கள் நடந்தன.

நமக்கு வேலை செய்தவர்களுக்கு பழிவாங்கல்கள் செய்தார்கள். அதனால் நான் அமைதியாக இருக்க வேண்டும் என்று நினைத்தேன். சில அரசியலில் சில நேரங்களில் நாம் அமைதியாக இருக்க வேண்டும். அதை தான் நானும் செய்தேன்.

நான் பதுங்கி இருந்தது பாராளுமன்றத் தேர்தல் எப்போது வரும் அதில் பாய வேண்டும் என்று நான் பதுங்கி இருந்தேன்.

என்னுடைய தந்தை அமரச் சந்திரசேகரன் அவரின் மகள் தான் புலி. புலி எப்படி ஒழிந்து கொண்டிருக்கும். அது பதுங்கி தான் இருக்கும். அதேபோன்று தான் நானும. பதுங்கி இருந்தேன். இப்பொழுது எனக்கான நேரம் வந்துவிட்டது. ஆகவே களமிறங்கி இருக்கிறேன். இந்த முறை மிகவும் பலமாக ஒரு கட்சியினூடாக ஒரு தேசிய கட்சியினூடாக களம் இறங்கி இருக்கிறேன்.

நான் எங்கே சென்றேன் என்று கேட்பவர்கள் மக்களுக்காக என்ன செய்தார்கள். என்ன செய்து கொடுத்தார்கள் இந்த ஐந்து வருடத்தில் அவர்கள் செய்த மாற்றம் என்ன? மலையகத்துக்கு செய்த சேவைகள் என்ன? அதே விடையம் தான் இன்னும் இருக்கிறது. எந்த மாற்றமும் நடக்கவில்லை.

பழைய உறுப்பினர்களை நம்பி நம்பி ஏமாற்றமடைந்தது போதும். நமக்கு ஒரு புதிய பாராளுமன்ற உறுப்பினர் வேண்டும். பழைய உறுப்பினர்களால் எந்த பிரயோஜனமும் இல்லை. எந்த சேவைகளும் செய்யவும் இல்லை.

என்னுடைய தந்தை 16 வருடங்களில் 35 ஆயிரம் வீடுகள் கட்டினார். ஆனால், இவர்கள் இன்று 3500 வீடுகளை கட்டிக் கொடுத்துவிட்டு பொய் பிரச்சாரங்கள் செய்து கொண்டு திரிகிறார்கள். 16 வருடங்களில் தந்தை பல சேவைகளை செய்திருக்கிறார். இவர்கள் ஒரு சேவையும் செய்ததாய் தெரியவில்லை.

எம்முடைய மக்களுக்கான ஒரு மாற்றம் வேண்டும். மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். மலையக மக்களின் பிள்ளைகளின் எதிர்காலம் பாதுகாக்கப்பட வேண்டும். இன்னும் ஐந்து வருட காலத்தில் நான் இந்த இடத்துக்கு வரும்போது நம்மளுடைய பிள்ளைகள் இதே கஷ்டத்தை அனுபவித்துக் கொண்டிருக்கக்கூடாது. அதற்கான ஒரு மாற்றமாக தான் நான் ஒரு பெண்ணா? தனியாக இறங்கி நிற்கிறேன்.

உங்களுடைய ஆதரவு இந்த முறை எனக்கு கிடைக்கும் என்பதில் உறுதியாக இருக்கிறேன். உங்களுடைய பெண்கள் என்றால் எத்தனையேர் பிரச்சனைகளுக்கு முகம் கொடுக்கிறார்கள். ஆனால் ஒரு பெண்ணிடம் குடும்ப செலவுக்கு பணம் இருந்தால் அந்தப் பெண் குடும்பத்தை எவ்வளவு நன்றாக பார்த்துக் கொள்வார். அதேபோன்று தான் நானும் ஒரு பெண்ணாக இறங்கி இருக்கிறேன்.

ஒரு பெண்ணாக நான் மலையகத்தை கையில் எடுக்கிறேன். மலையகத்தை சரியான முறையில் கொண்டு நடாத்த வேண்டும் என்ற பொறுப்பு எங்களுக்கு இருக்கிறது. ஆகவே இம்முறை நான் மைக் சின்னத்தில் களமிறங்கி இருக்கிறேன். இளைஞர்களுக்காகவும் எதிர்கால சந்ததியினருக்காகவும் இந்த முறை உங்களுடைய ஆதரவை எதிர்பார்த்து இருக்கிறேன். கடந்த முறை இருந்த ஆதரவை விட இன்னும் அதிகமாக ஆதரவு கிடைக்கும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

நான் பல இடங்களுக்குச் செல்கிறேன். அங்கே என் மீது வைத்திருக்கும் அன்பை பார்க்கிறேன். இம்முறை வெற்றி நிச்சயம் என்பதை அந்த அன்பு எனக்கு காட்டுகிறது. என்னுடைய தந்தை இங்கிருந்து எனது மகளுக்கு வாக்களியுங்கள் என்று சொல்லியிருந்தால் நிச்சயமாக உங்களது வாக்குகளை எனக்கு வழங்கி இருப்பீர்கள். இன்று தந்தை இல்லை ஆனால் தந்தைக்கு ஒப்பானவர்கள் நிறைய பேர் இருக்கிறார்கள். அவர்களோடு இணைந்து இந்த முறை நான் வாக்கு கேட்கிறேன்.

ஆனால், உங்களுடைய பிள்ளைகளின் எதிர்காலத்தை நான் பொறுப்பெடுத்து உங்களுடைய பிள்ளைகளுக்கான நல்ல கல்வியை கொடுத்து கல்வியின் மூலமாக இந்த நல்ல சமுதாயத்தை உயர்த்துவோம் என்பதை உறுதியாக சொல்கிறேன். இந்த முறை மைக் சின்னத்திற்கு உங்களுடைய ஆதரவு இருக்கும் என நம்புகின்றேன் என்றார்.

# அரசியலமைப்பு மாற்றியமைக்கும் போது அங்கு கட்டாயம் தமிழ் பிரதிநிதித்துவம் ஒன்று இருக்க வேண்டும்

## கண்டி வேட்பாளர் பாரத் அருள்சாமி

(க.கிஷாந்தன்)

என்னை கண்டி மாவட்டத்தின் தமிழ் பிரதிநிதியாக தேர்ந்தெடுக்கும் பட்சத்தில், பாராளுமன்றத்தில் உங்களுடைய பிரதிநிதியாக கண்டி மாவட்டத்திற்கு ஒரு நிலைபேண்தகு அபிவிருத்தியை உருவாக்குவதற்கு முன்னின்று செயல்படுவேன் என ஐக்கிய மக்கள் கூட்டணியின் கண்டி மாவட்ட வேட்பாளர் பாரத் அருள்சாமி தெரிவித்தார்.

கண்டியில் இடம்பெற்ற பொதுக் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், எங்களை பொருத்தவரை ஒரு பாராளுமன்ற உறுப்பினரை பாராளுமன்றத்திற்கு அனுப்புவது எங்களுக்கு தேவையான சட்டங்கள் உருவாக்குவதற்காகும். அபிவிருத்தி என்பதையும் தாண்டி எங்களுக்கான பாராளுமன்றத்தில் எங்களுடைய உறுப்பினர் ஒருவர் இருக்க வேண்டும் என்பதற்காகவே இந்த உறுப்புரிமை நாங்கள் பெற்றுக்கொள்கின்றோம்.



கடந்த காலங்களில் பலர் ஆளும் கட்சிகளிலும், எதிர்க்கட்சிகளிலும் 10 வருடமாக பாராளுமன்ற உறுப்பினராக இருந்தும் எங்களுடைய கண்டி வாழ் தமிழ் மக்களுக்கு எதேனும் நன்மை கிடைத்ததா என்று கேட்டால் அது இன்னும் ஒரு கேள்விக் குறியாகவே இருக்கின்றது. இன்று ஸ்ரீபாத தேசிய கல்வியற் கல்லூரிக்கு எத்தனையோ மாணவர்கள் கண்டி மாவட்டத்திலிருந்து வருகை தர முடியாதுள்ளனர். ஆகவே, அதில் சட்டமாற்றங்கள் கொண்டுவரப்பட்டதா என்பது இன்றைக்கும் ஒரு கேள்வி குறியாகவேதான் இருக்கின்றது. இன்று அரசியலமைப்பு மாற்றியமைக்க போவதாக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கக் கூறியுள்ளார். இந்த நேரத்தில் அங்கு கட்டாயம் தமிழ் பிரதிநிதித்துவம் ஒன்று இருந்தாக வேண்டும். கண்டி மாவட்டத்தில் இன்னைக்கு பல பிரதேச செயலகங்கள் இருந்தாலும் கூட கிராம சேவகர்கள் பிரிவுகள் இன்னும் பிரிக்கப்படாமல் இருக்குகிறது. தமிழ் மக்கள் செறிந்து வாழ்கிற பகுதிகளில் ஒரே கிராம சேவகர் பிரிவில் கிட்டத்தட்ட 4,000 மக்கள் வாழ வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அதற்கு இன்னும் தீர்வுகள் வழங்கப்படவில்லை.

ஆகவே, என்னை உங்களுடைய பிரதிநிதியாக தேர்ந்தெடுக்கும் பட்சத்தில் இந்த பராளுமன்றத்தில் உங்களுடைய பிரநிதியாக இந்த கண்டி மாவட்டத்திற்கு ஒரு நிலைபேண்தகு அபிவிருத்தியை உருவாக்குவதற்கு முன்னின்று செயல்படுவேன் - என்றார்.

# வேட்பாளர் றிஸ்லி முஸ்தபாவை ஆதரித்து அம்பாறையில் கருத்தரங்குகள்





(பாறுக் ஷிஹான்)

எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலில் போட்டியிடும் பாராளுமன்ற தேர்தல் வேட்பாளரும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் அம்பாறை மாவட்ட இளைஞர் அமைப்பாளர் றிஸ்லி முஸ்தபாவை ஆதரித்து ஆண், பெண்களுக்கான தெளிவூட்டல் கருத்தரங்கு அம்பாறை மாவட்டத்தில் கல்முனை ,இறக்காமம், நற்பிட்டிமுனை, பகுதிகளில் பிரச்சார நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன.

இதன் போது நற்பிட்டிமுனை,பாண்டிருப்பு சந்திகள் , கல்முனை சந்தை நகர வர்த்தக நிலையங்களுக்கு சென்ற பாராளுமன்ற தேர்தல் வேட்பாளரும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் அம்பாறை மாவட்ட இளைஞர் அமைப்பாளர் றிஸ்லி முஸ்தபா தனக்கு ஆதரவினை வழங்குமாறு பொதுமக்கள் வர்த்தகர்களிடம் வேண்டுகோள் விடுத்தார்.

அரசியல்வாதிகள் பாராளுமன்ற உறுப்பினர்களாக அமைச்சர்களாக மக்களின் வாக்கு பலத்தால் தெரிவுசெய்யபட்ட பின்னர் தங்களின் கடமைகளை நேர்மையாகச் செய்வதில்லை. இந்த பிழையான போக்கை மாற்ற என்னால் முடிந்தளவு போராடுவதுடன் பாராளுமன்ற உறுப்பினர் பதவி, மற்றும் அமைச்சர் பதவிகளுக்கான வரப்பிரசாத வாய்ப்புக்களை முழுவதுமாக பெற்றுக்கொண்டு, தாம் சார்ந்த சமூகத்தினுடைய பிரச்சனைகள் என்னவென்று அறிந்திருந்தும், அவற்றுக்குரிய தீர்வினைக் காண எந்தவித ஆக்கபூர்வ நடவடிக்கையும் எடுக்காததன் விளைவுதான் இன்று நான் இத்தெர்தலில் போட்டி இட காரணம் என றிஸ்லி முஸ்தபா தெரிவித்தார்.

அத்துடன் எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலிலும் இதே நிலைமைதான் ஏற்படபோகின்றது என நினைக்கிறேன். அரசியல்வாதிகள் மீது வெறுப்படைந்த மக்கள் மாற்றத்தையும், ஊழலற்ற அரசியலையும் எதிர்பார்த்தே 'தேசிய மக்கள் சக்தியை' ஆட்சியில் அமர்த்தி உள்ளார்கள்.இதன் மூலம் நாட்டிலே ஒரு புதிய அரசியல் கலாசாரம் உருவாகும் என்ற நம்பிக்கையும் ஏற்பட்டுள்ளது. அந்த நம்பிக்கைக்கு ஏற்றாற்போல் நானும் செயல்பட நினைப்பதோடு, எதிர்கால அரசியல் பயணத்தை நான் சார்ந்த சமூகத்துடன் இணைந்து செம்மையாகவும்இ உண்மையாகவும் நடாத்த உத்தேசித்துள்ளேன்,

இதன் போது கட்சியின் பிரதேச முக்கிய உறுப்பினர்கள் பங்கேற்றிருந்தனர் .அத்துடன் மக்களை நேரடியாக சந்தித்து வீடு வீடாக பிரச்சாரப் பணிகளும் முன்னெடுக்கப்பட்டன.

# பள்ளிவாச நம்பிக்கையாளர்களுக்கு ஒருநாள் செயலமர்வு





(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பள்ளிவாசல் நம்பிக்கையாளர்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்ட ஒருநாள் செயலமர்வு புத்தசாசன மத விவகார கலாசார அமைச்சின் ஆலோசனைக்கு அமைய, முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில், முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் எம்.எஸ்.எம்.நவாஸ் அவர்களின் வழிகாட்டலின் கீழ் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள காத்தான்குடி, ஏறாவூர், ஓட்டமாவடி, வாழைச்சேனை ஆகிய பிரதேசங்களில் கடந்த 17,18,19 ஆம் திகதிகளில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் சுமார் 150 பள்ளிவாசல்களில் இருந்து 450க்கும் மேற்பட்ட நம்பிக்கையாளர்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

இந்த கருத்தரங்கில் பள்ளிவாசல் நம்பிக்கையாளர்களின் பொறுப்புகள் மற்றும் கடமைகள், பள்ளிவாசல் எவ்வாறு ஒரு சமூக மையமாக செயற்படுவது, இலங்கை வக்பு சபை மற்றும் இலங்கை வக்பு நியாய சபை ஆகியன தொடர்பில் நம்பிக்கையாளர்களுக்கு தெளிவூட்டப்பட்டன.

இக் கருத்தரங்கில் முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் சார்பாக வளவாளர்களாக அதன் உதவிப் பணிப்பாளர் எம்.எஸ்.அலாஅஹ்மத், வக்பு பிரிவின் அதிகாரி அஷ்ஷேக் எம்.ஐ.முனீர், வக்பு பிரிவின் பொறுப்பதிகாரி ஏ.எஸ்.எம். ஜாவித், வக்பு நியாய சபை பதில் செயலாளர் எம்.என். எம். ரோஸன் ஆகியோரும் மேலும் சிறப்பு வளவாளர்களாக ரிஸ்வி மஜீதி மற்றும் அஷ்ஷேக் நுஸ்ரி ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

மேலும் இச் செயலமர்வை எதிர்வரும் காலங்களில் இலங்கையின் அனைத்து மாவட்டங்களிலும் நடாத்த முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம் தீர்மானித்து அதற்கான முன்னெடுப்புகளை எடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கல்முனை (வடக்கு) ஆதார வைத்தியசாலைக்கு 15 மில்லியன் ரூபா பெறுமதியான மருத்துவ உபகரணங்கள் அன்பளிப்பு

அவுஸ்திரேலியாவின் வன்னி ஹோப் லிமிடெட் நிறுவனத்தின் உதவியுடன் வைத்தியசாலை சேவை சபையினால் 15 மில்லியன் ரூபா பெறுமதியான மருத்துவ உபகரணங்களை கல்முனை (வடக்கு) ஆதார வைத்தியசாலைக்கு இன்று அன்பளிப்புச் செய்தது.

வைத்தியசாலை சேவை சபையின் பணிப்பாளர் வணக்கத்திற்குரிய ராஜவல்லே சுபுதி தேரர் அவர்களால்)கல்முனை ஆதார வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் ரங்க சந்திரசேன அவர்களிடம் வைத்தியசாலை வளாகத்தில் வைத்து உத்தியோகபூர்வமாக வைத்திய உபகரணங்களை கையளித்தார்.

குறித்த நன்கொடையை அமெரிக்கா, இங்கிலாந்து, அவுஸ்திரேலியா மற்றும் ஜேர்மனி ஆகிய நாடுகளில் இருந்து பெற்றுக்கொள்வதில் தனிப்பட்ட முறையில் ஈடுபட்டுள்ள வைத்தியசாலை சேவை சபையின் பணிப்பாளர், கௌரவ ரஜவல்லே சுபுதி தேரர். வன்னி ஹோப் லிமிடெட், அவுஸ்திரேலியாவின் பணிப்பாளர் திரு.ரஞ்சன் சிவஞானசுந்தரம் கப்பல் போக்குவரத்துக் கட்டணங்கள் மற்றும் உரிய வரிகளைச் செலுத்துவதில் தனிப்பட்ட முறையில் ஈடுபட்டார்.

கல்முனை (வடக்கு) ஆதார வைத்தியசாலைக்கு கிடைத்த உபகரணங்களில் சில 03 ஐஊரு படுக்கைகள், 02 மின்சார அனுசரிப்பு பிரசவ படுக்கைகள், 02 டயாலிசிஸ் படுக்கைகள், சிசு சூடு மற்றும் சிசு இன்குபேட்டர் போன்றவை கல்முனை பிரதேச மக்களுக்கு சுகாதார சேவையை வழங்குவதற்கு இந்த உபகரணங்கள் மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

இந்நிகழ்வில் வைத்தியசாலை சேவை சபையின் வணக்கத்திற்குரிய ஒமரே சுதாசி, வைத்தியசாலை சேவை சபையின் செயலாளர் வசந்த அமரதிவாகர மற்றும் வைத்தியசாலை சேவை சபை,இஸ்ஸிர உதயந்த ஆகியோர் கலந்துகொண்டனர்.

நன்கொடை மேற்பார்வையாளர்களை ஒழுங்கமைத்து ஒருங்கிணைப்பதில் கலாநிதி நாஜ் நாகேந்திரன் மற்றும் பொறியியலாளர் பிரபாத் சில்வா ஆகியோர் முக்கிய பங்கு வகித்தனர்.

# திருமலை மூதூர் கிழக்கில் சண்முகம் குகதாசனின் பிரச்சாரப்பணிகள் ஆரம்பம்..!

(அ . அச்சுதன்)

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் திருகோணமலை மாவட்ட வேட்பாளரும், திருகோணமலை மாவட்ட இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவருமான சண்முகம் குகதாசனின் தேர்தல் பிரசாரப்பணிகள் (20) மூதூர் கிழக்கில் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

முதலாவது துண்டுப்பிரசுரம் மூதூர் கிழக்கு சேனையூர் ஸ்ரீ நாகம்மாள் ஆலயத்தின் பிரதம குரு சிவஸ்ரீ அ.அரசரெத்தினம் அவர்களிடம் கையளிக்கப்பட்டது.

இதனைத்தொடர்ந்து, தன்னார்வ செயற்பாட்டாளர்களால், பாட்டாளிபுரம், வீரமாநகர், சீனன்வெளி, உப்புறல், இளங்கத்தை, இத்திக்குளம், பள்ளிக்குடியிருப்பு, நல்லூர், மலைமுந்தல் உள்ளிட்ட பல பகுதிகளில் குகதாசனால் முன்னெடுக்கப்பட்ட வேலைத்திட்டங்கள் உள்ளடங்கிய துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டது.

(21) மூதூர் கிழக்கில் பிரசாரப்பணிகள் இடம் பெற்று வருகின்றன.

பிரசாரப்பணிகளின் போது வேட்பாளர் சண்முகம் குகதாசனிற்கு மக்கள் அமோக ஆதரவு தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.





# திருமலையில் தமிழ் பிரதிநிதித்துவத்தை பாதுகாக்க வேண்டும்

## இலங்கை தமிழ் அரசு கட்சியின் திருகோணமலை மாவட்ட முதன்மை வேட்பாளர் சண்முகம் குகதாசன்

(ஹஸ்பர் ஏ.எச்)

இம்முறை இடம் பெறவுள்ள நாடாளுமன்ற தேர்தலில் திருகோணமலை மாவட்டத்தின் தமிழ் பிரதிநிதித்துவத்தை அனைவரும் ஒன்றினைந்து பாதுகாக்க வேண்டும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கை தமிழ் அரசு கட்சியின் திருகோணமலை மாவட்ட முதன்மை வேட்பாளருமான சண்முகம் குகதாசன் தெரிவித்தார். மூதூரில் இடம் பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் தெரிவிக்கையில்



தண்டவாளம் போன்று இனப்பிரச்சினைக்கான தீர்வையும் அபிவிருத்தியையும் இணைந்த வகையில் அரசியலை முன்னெடுப்பது சிறந்தது. திருகோணமலை மாவட்டத்தை பொறுத்த மட்டில் தமிழ் நாட்டில் சுமார் 2000 குடும்பங்களும் கனடா நாட்டில் சுமார் 500 குடும்பங்களும் வாழ்ந்து வருகின்றனர் தமிழ் பிரதிநிதித்துவம் இம்முறை அதிகமான வாக்களிப்பின் ஊடாக பாதுகாக்க விழிப்புணர்வுகளை இளைஞர்கள் மத்தியில் நடாத்த வேண்டும். யாழ் மாவட்டத்தில் ஒரு பிரதிநிதித்துவம் இம்முறை குறைவடைந்துள்ளது 1827களில் முதல் மக்கள் தொகை கணக்கெடுப்பில் 81 வீதமாக இருந்த தமிழ் மக்கள் தொகை தற்போது 24 வீதமாக குறைவடைந்துள்ளது அம்பாறையில் 18 வீதமாக குறைவடைந்துள்ளது எனவே தான் அனைவரும் மனம் தளராமல் வீட்டு சின்னத்துக்கு வாக்களிக்க செய்யவும் இதன் மூலம் தமிழ் தேசியத்தை பாதுகாக்க வாக்களிக்க வேண்டும் என்றார்.

# அகில இலங்கை இந்து குருமார் சங்கம் பாபு சர்மாவிடம் கோரிக்கை விடுப்பு



இலங்கையில் உள்ள அனைத்து இந்து குருமார்களினுடைய பிரச்சினைகளை தீர்ப்பதற்காக உரிய நடவடிக்கைகளை புதிய அரசாங்கத்துடன் இணைந்து மேற்கொள்ள வேண்டும் எனவும் ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் தேசிய பட்டியல் அவங்கத்தவரான பாபு சர்மாவிடம் அகில இலங்கை குருமார் சங்கம் சார்பாக வட்டவளை சந்திரன் குருக்கள் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்து குருமார்களுடைய பிரச்சினைகளை உரிய தரப்பினர்களுக்கு கொண்டு செல்லவும் அவர்களுக்கான அரச அங்கிகாரம் கிடைக்க வேண்டும் எனவும் அரசாங்க உதவி திட்டங்களை பெற்றுக்கொடுப்பதற்காகவும் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் அகில இலங்கை குருமார் சங்கம் சார்பாக வட்டவளை சந்திரன் குருக்கள் பாபுசர்மாவிடம் கோரிக்கைகளை முன் வைத்துள்ளார்.

# பல்கலைக்கழகம் செல்லும் 33 கல்விச் சாதனையாளர்கள் கௌரவிப்பு







( வி.ரி.சகாதேவராஜா)

காரைதீவிலிருந்து இம்முறை பல்கலைக் கழகம் செல்லும் 33 கல்விச் சாதனையாளர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

காரைதீவு வுசுயுமுளு ரூ யுளுஊமு அமைப்பின் ஏற்பாட்டில் காரைதீவு விபுலாநந்த கலாசார மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை(19) அமைப்பின் செயலாளர் எஸ்.நந்தகுமார் தலைமையில் இவ் விழா சிறப்பாக இடம்பெற்றது.

லண்டனில் வாழும் காரைதீவைச் சேர்ந்த வைத்திய நிபுணர் வைத்தியர் அருளானந்தம் வரதராசன் தனது பெற்றோர் சார்பில் ஸ்தாபித்த இவ் அமைப்பின் ஏற்பாட்டில் நடைபெறும் நான்காவது அரங்கு விழா இதுவாகும்.

இந்நிகழ்வுக்கு முதன்மை அதிதியாக சம்மாந்துறை ஆதார வைத்தியசாலை

பொது சத்திரசிகிச்சை நிபுணர் மருத்துவர் நடேசன் அகிலன் கலந்து சிறப்பித்தார்.

நட்சத்திர அதிதிகளாக சிவ.ஜெகராஜன் (மேலதிக அரசாங்க அதிபர், மாவட்ட செயலகம்,அம்பாரை) , கோ. அருணன்(பிரதேச செயலாளர், காரைதீவு ஏ. சுந்தரகுமார்( செயலாளர், பிரதேச சபை காரைதீவு) ஆ. பார்த்தீபன் (உதவிக் கல்விப் பணிப்பாளர், மகாணக் கல்வித் திணைக்களம்) , வி.ரி. சகாதேவராஜா (ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளர், காரைதீவு) ஆகியோர் கலந்து சிறப்பித்தார்கள்.

விழாவில் மண்ணுக்கு மகிமை சேர்த்தவர்கள் வரிசையில் பொது சத்திரசிகிச்சை நிபுணர் மருத்துவர் நடேசன் அகிலன்,

சிவ.ஜெகராஜன் (மேலதிக அரசாங்க அதிபர், மாவட்ட செயலகம்,) ,

வி.ரி. சகாதேவராஜா (ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளர், காரைதீவு) ஆகியோர் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டனர்.

மேலும்,

விஞ்சைமிகு அதிதிகளாக வைத்தியர் மஞ்சுரேகா பிரசாந்தன் (ஆதார வைத்தியசாலை,கல்முனை வடக்கு) , வைத்தியர் கீர்த்திகா ரகுமதன்

(அஸ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலை,கல்முனை).

ஏ.மகேந்திரராஜா (ஓய்வுநிலை டீமுஊ - முகாமையாளர் காரைதீவு) வைத்திய அதிகாரிகளான மைத்ரி தினேஸ்காந்த் (ஆதார வைத்தியசாலை,கல்முனை வடக்கு) வி. றேணுபிரியக்ஷன் (ஆதார வைத்தியசாலை,திருக்கோவில்) . கே. ஆதர்ஷன் (ஆதார வைத்தியசாலை, சம்மாந்துறை) மற்றும், எஸ். மணிமாறன் (அதிபர், சண்முகா மகா வித்தியாலயம் காரைதீவு) ஆசிரியர் ஆர்.இரட்ணகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# புலனாய்வு செய்தியாளர் விருதினை பெற்றுக்கொண்ட பாறுக் ஷிஹான்




இலங்கையில் கலை, இலக்கியம், ஊடகத்துறை,சமூகப்பணி என்பவற்றில் சாதனை படைத்த பல்துறை ஆளுமைகளைக் கௌரவிக்கும் ளுமல வுயஅடை ஊடக அமைப்பின் விருதுகள் வழங்கி கௌரவிக்கும் விழா மிகப் பிரமாண்டமாக ஏற்பாடு செய்யப்பட்டு கடந்த சனிக்கிழமை(19) தென் கிழக்கு பல்கலைக்கழக தொழிநுட்ப பீட அரங்கில் ஸ்கை தமிழ், துணிந்தெழு பிரதம நிறைவேற்றுப் பணிப்பாளர் ஜெ.எம். பாஷித் தலைமையில் இடம்பெற்றது.

தேசிய ,சர்வதேச விருது விழாக்களுக்கு நிகராக ஏற்பாடு செய்யப்பட்ட இவ் மாபெரும் விருது விழாவில் கடந்த 18 வருடங்களுக்கு மேலாக ஊடகத்துறையில் செயற்பட்டு வரும் பாறுக் ஷிஹான் புலனாய்வு செய்தி அறிக்கையிடலுக்கான சிறந்த புலனாய்வு செய்தியாளர் விருதினை பெற்றுக் கொண்டார்.

கடந்த வருடம் கட்டாரில் நடைபெற்ற இந்த விழா இரண்டாவது தடவையாக இலங்கையில் இம்முறை நடைபெற்றதுடன் இந்த விருது விழாவில் பல்வேறு துறை சார்ந்த ஆளுமைகள் கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன ஆலோசகரும், தொழிலதிபருமான புரவலர் ஹாசிம் உமர் பிரதம அதிதியாக கலந்து கொண்டதுடன், இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் கலாநிதி யூ.எல்.அப்துல் மஜீத், கலை கலாச்சார பீடாதி பேராசிரியர் எம்.எம். பாஸில், தினகரன் பிரதம ஆசிரியர் செந்தில் வேலர் உட்பட நிறைய பிரமுகர்கள் பலரும் கௌரவ, விசேட அதிதிகளாக கலந்து கொண்டனர்.